# மணி தீபம்



அமரர் பொன்னுத்துரை முத்துமணி

அவர்களின்

சிவபதப்பேற்றின் நினைவாக வெளியிடப்பெற்ற

# நினைவு மலர்

25-03-2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் நவாலியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம்
கொழும்புத்துறை, வள்ளிபுனம் புதுக்குடியிருப்பையும்
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் பொன்னுத்துரை முத்துமணி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த நினைவலைகளுடன் வெளியிடப்படும்

# 31ம் நாள் நினைவலைகள்

**24.02.2016 – 25.03.216**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின்

குல விளக்காய் திகழ்ந்து

எல்லோருடனும் அன்பையும்

நட்பையும் பேணி நின்று

எங்களை நல்வழிப்படுத்தி

தனது உடல், பொருள், ஆவி மூன்றையும்

எங்களுக்காய் அர்ப்பணித்த

எமது அன்புத் தெய்வத்தின்

பாதக் கமலங்களுக்கு இம்மலரினை

சமர்ப்பணமாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*- குடும்பத்தினர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'



பிறப்பு
26-02-1926

மறைவு
24-02-2016

அமரர்

# பொன்னுத்துரை முத்துமணி

## திதி நிர்ணயம்

மன்மத நல்லாண்டு பரவிட நல் மாசி
திங்கள் பன்னிரண்டாம் நாள் புண்ணியம் நிறைந்த
அமிர்த வேளையில் துதியை திதியில் பூவுடல்
நீத்த பொன்னுத்துரை முத்துமணி பொன்னாலை
வரதராஜ பெருமாள் பாதம் நல்லிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரத்திரட்டு

திருச்சிற்றம்பலம்

## காப்புச் செய்யுள்

திருவாக்குங் செய்கருமங் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்குமுருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

## பஞ்ச புராணம்

### தேவாரம்

ஆலைப் படுகரும்பின் சாறுபோல அண்ணிக்கும்
அஞ்செழுத்தின் நாமத் தான்காண்
சீல முடையடியார் சிந்தை யான்காண்
திரிபுரமூன் றெறிபடுத்த சிலையி னான்காண்
பாலினொடு தயிர் நறுநெய் ஆடினான் காண்
பண்டரங்க வேடன்காண் பலிதேர் வான்காண்
வேலை விடமுண்ட மிடற்றினான் காண்
விண்ணிழி தண்வீழி மிழலை யானே.

### திருவாசகம்

நெக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்துங் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதுந் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தாற் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலுந் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சி லிர்த்துப்
புக்கு நிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாய் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா!
முக்கணா! நாற்பெருந் தடந்தோட்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கிவ் அண்டத் தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளி
சோதிமணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பெரியராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்தை
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையாய் சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

அபடசார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாளே
உனை நானினைந்தருட் பெறுவேனே
இபமா முகன்தனைக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவினன் குடிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்கி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர் பொன்னுத்துரை முத்துமணி

## அவர்களின்

# அன்று முதல் இன்று வரை

ஈழத்திரு நாட்டின் வடபால் அமைந்த மருதமும் நெய்தலும் கலந்த நிலப்பரப்பை தன்னகத்தே கொண்டு செல்வங்கள் கொழிக்கும் வயல்கள் நிரம்பியதாகவும் கல்விச் செல்வத்திலும் சிறப்புற்று விழங்கியதுடன் கிழக்கில் முருகமூர்த்தி கோவில், சிந்தாமணிப் பிள்ளையார் திருக்கோவிலையும் அதன் வடக்கில் அட்டகிரி முருகவேல் திருக்கோவிலையும் மேற்கில் கண்ணகி அம்மன் திருக்கோவிலையும் தென்புறத்து எல்லையிலே நரசிம்ம வைரவர் திருக்கோவிலையும் தன்னகத்தே கொண்ட சிறப்புக்களுடனும் தங்கத் தாத்தாவாம் சோமசுந்தரப் புலவர் பிறந்த நவாலி மண்ணில் 1926.02.26ம் திகதி கந்தையா வள்ளிப்பிள்ளை தம்பதியர்களின் கனிஸ்ட புதல்வியாக வந்துதித்தார்.

சகல செல்வங்களுடனும் அவ்வூரிலேயே கல்வி கற்று கன்னிப்பருவம் அடைந்து பெற்றோரின் விருப்பப்படி கோப்பாய் சின்னப்பு சின்னாச்சி தம்பதிகளின் புதல்வன் பொன்னுத்துரையை மணம் முடித்து முறையே விமலா (வள்ளிபுனம்) தெய்வநாயகி (வட்டக்கச்சி) காலம் சென்ற றமணி(கெக்கிராவை) வரதராஜன்(பளை) மங்களேஸ்வரி (வட்டுக்கோட்டை) தேவராசா(கனடா) ஆகிய மக்களை பெற்றெடுத்து சீரும் சிறப்புடனும் வளர்த்து வந்தார். 1972ம் ஆண்டு இ.போ.ச சாரதியாக கடமை புரிந்த கணவர் இறந்த பின்பும் வறுமையிலும் செம்மையாய் வளர்த்து வந்து உரிய காலத்தில் பிள்ளைகளுக்கு வாழ்க்கைத் துணையும் தேடித்தந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனின் தொழிலுக்காக 1960 தொடக்கம் 1970 வரை யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் வசித்து அதன் பின்பு விவசாய நோக்குடன் குடும்பத்துடன் வள்ளிபுனத்தில் குடியேறினார். இவர் 06 பிள்ளைகள், மருமக்கள், 28 பேரப்பிள்ளைகள், 34 பூட்டப்பிள்ளைகள், 02 கொப்பாட்டன் பிள்ளைகளையும் தன் வாழ்வில் கண்டு இளைய மகன் தேவராசாவுடன் கனடாவில் 02 ஆண்டு காலம் வசித்தும் குடும்பத்துடன் கூடி மகிழ்ந்து இறை பக்தியுடன் வாழ்ந்து வந்தார்.

தனது 90 ஆவது வயதில் 2016.02.24 அன்று இறைபதம் அடைந்தார். அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல திருக்கேதீஸ்வரநாதர் கௌரி அம்பாளை இருகரம் ஏந்தி வேண்டி நிற்கின்றோம்.

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகளால் அருளப்பெற்ற

# சிவபுராணம்

( எட்டாந் திருமுறை )

சிவபுராணம், சிவனது அனாதியான பழமையை, பெருமையைக் கூறும் பதிகம். மாணிக்கவாசகரின் அனுபவப் பிழிவு. இத்திருப்பதிகம் திருப்பெருந்துறையில் பாடியருளப்பெற்றது. தற்சமயம் இத்தலம் ஆவுடையாயர் கோவில் என்ற பெயரில் விளங்குகின்றது. இது புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியிலிருந்து தெற்கே 13 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. குருந்த மரத்தடியில் இறைவன் குருவாக இருந்து திருவாதவூரரை ஆட்கொண்ட தலம். சிவபுராணத்தைப் பொருள் உணர்ந்து ஓதினால் சிவனடி சேரலாம் என்பது மணிவாசகரின் துணிபு. இச்சிவபுராணத்தை பூசையின் போதும் வீதிவலம், மலைவளம், ஆலய வழிபாடு, மகேஸ்வர பூசை முதலிய காலங்களில் பாராயணம் செய்யலாம். வீட்டிலுள்ளவர்கள் சேர்ந்து தினமும் சிவபுராணத்தைக் காலையிலும் மாலையிலும் ஓதினால் சகல துன்பங்களும் நீங்கி வீடு இலட்சுமிகரமாகத் திகழும் என்பது திண்ணம்.

திருச்சிற்றம்பலம்

**தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக் கி**
**அல்லலறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூர் என்கோன்**
**திருவா சகம்என்னும் தேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமச்சிவாய வாழ்க நாதன் தாள்வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமமாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார்பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவுறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்ற
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே, அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

## ஆனந்த மனோலயம்

(தில்லையில் அருளியது)

திருச்சிற்றம்பலம்

முந்துநற் றாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம்வைமின்
சத்தியுஞ் சோமியும்பார் மகளும்
நாமகளோடு பல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 1

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறநிலாமே
குனிமின் றொழுமின்னெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடிந்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பக நாட்டியெங்கும்
எழில்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்துநாமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 4

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமன்றித்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண்அப்பற்கு
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 5

உலக்கைபல வோச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்து நின்றார்
காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடிந்துநாமே. 6

சூடகந் தோள்வளை யார்ப்பவார்ப்பத்
தொண்டர்குழா மெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
நாமுமவர் தம்மை யார்ப்பவார்ப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடப்பொற் சுண்ணமிடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை யார்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 8

வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கைநாட்டி
மெய்யெனு மஞ்சள் நிறையை அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொ னுலக்கை வலக்கைபற்றி
ஐய னணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொறு சுண்ண மிடிந்துநாமே. 9

முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாட
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
அத்தன் கருணையொ டாடவாட
ஆடப்பொற் சுண்ணம் மிடித்துதாமே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவளந் துடிப்ப
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமினெம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமி னம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண்டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடிந்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமைய னெம்மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடிந்துநாமே. 13

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை யிரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலும் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுச்செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்க னெயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல்பாடி
இயைந்தன முப்புர மெய்தல்பாடி
ஏழை யடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடி
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடு மரவம்பாடி
ஈசற்குச் சுண்ண மிடித்துதாமே. 19

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்
காதியு மந்தமு மாயினாருக்
காடப் பொற் சுண்ண மிடித்துநாமே. 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பட்டினத்தார் பாடல்

## பட்டினத்தாரால் அருளிச் செய்யப்பட்டது

காவிரிப்பூம்பட்டினத்தில் குபேரனாக வாழ்ந்த சுவேதாரணயச் செட்டியார் "பட்டினத்தார்" என மக்களால் அன்பாக அழைக்கப்பட்டார். அவரின் வளர்ப்பு மகனாக மருதபிரானின் (இறையவதாரம்) துளையில்லா ஊசியும் "காதற்ற ஊசியும் வாராது காண் நும் கடைவழிக்கே" என்ற மகாவாக்கியமும் அவரை ஒரு நொடியில் கோவணம் தரித்து துறவு பூண வைத்தது. பட்டினத்தாரின் தமக்கை அவரைக் கொல்லக் கருதி நஞ்சு கலந்த அப்பத்தை உண்ணக் கொடுக்க, அச்சதியைத் தன் ஞானத்தால் உணர்ந்து "தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பபடம் வீட்டைச் சுடும்" என்று பாடித் தமக்கை வீட்டுக் கூரையில் அப்பத்தைச் செருக வீடு தீப்பற்றி எரிந்தது. மயானத்தில் தன் அன்னையின் உடலைப் பச்சை வாழை மட்டைகளையும், இலைகளையும் அடுக்கிய சிதையில் படுக்க வைத்து "ஐயிரண்டு திங்களா யங்கமெல்லாம் நொந்து பெற்று" என்று பாடத் தொடங்கி அன்னையைத் தீயுண்ணச் செய்து ஈமக்கடன் கழித்தார்.

"பேய்க்கரும்பு உனக்கு எப்பொழுது இனிக்கின்றதோ அப்பொழுது உனக்கு முத்தி" என்ற இறையருள் வாக்கால் அவர் திருவொற்றியூர் திருத்தலம் சென்றபோது பேய்க்கரும்பை அவர் சுவைக்க, இனித்தது. தமக்கு முத்தி நெருங்கும் காலம் வந்ததை யுணர்ந்து கடற்கரையில் சிறுவர்களுடன் கூடி விளையாடி மணலுக்குள் தம்மைப் புதைக்கச் செய்து கூடையால் அவ்விடத்தை மூடச் செய்து பின் சிறுவர்கள் திறந்து பார்த்தபோது அங்கு பட்டினத்தாருக்குப் பதிலாக சிவலிங்கம் ஒன்று இருப்பதைக் கண்டனர். திருவொற்றியூர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரையில் இருக்கும் இச்சிவலிங்கத்திற்கு அவ்வூர் மக்கள் சிறிய கோவில் ஒன்றைக் கட்டி வழிபட்டு வந்தனர். இன்றும் வழிபட்டு வருகின்றனர். இவரின் அருட்பாடல்கள் கோவில்களிலும், வயோதிப இறுதிக் காலங்களிலும், மரணச் சடங்குகளிலும் விருப்புடன் பாடப்பட்டு வருகின்றன. இவை இல்லறத்தாரையும் துறவு பூண வைப்பவை, முத்திப் பேற்றைக் கொடுக்கவல்லவை.

# பட்டினத்தார் பாடல்கள்

## உடல் கூற்று வண்ணம்

### குழிப்புச்சந்தம்

தனதனதான தனதனதான
தந்ததனந்தன தந்தனந்த
தனனதனந்த தனனதனந்த
தானனதானன தானனதந்த
தந்ததனதான தனதானனா.

ஒருமடமாதும் ஒருவனும் ஆகி
இன்பசுகம் தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறுசுரோணித மீதுகலந்து
பனியில் ஓர்பாதி சிறுதுளிமாது
பண்டியில் வந்துபு குந்துதிரண்டு
பதுமம் அரும்பு கமடம்இதென்று
பார்வை மெய்வாய் செவி கால்கைகள் என்ற
உருவமும் ஆகி உயிர்வளர்மாதம்
ஒன்பதும்ஒன்றும் சிறைந்துமடந்தை
உதரம் அகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமும் நாளும்அறிந்து
மகளிர்கள்சேனை தரஅணைஆடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்படஉந்திஉடைந்துகவிழ்ந்து
மடமயில்கொங்கை அமுதம் அருந்தி
ஓர்அறிவு ஈர்அறிவு ஆகிவளர்ந்து
ஒளிநகைஊறல் இதழ் மடவாரும்
உவந்துமுகந்திட வந்துதவழ்ந்து
மடியில் இருந்து மழலைமொழிந்து
வாஇருபோ என நாமம்விளம்ப
உடைமணிஆடை அரைவடம்ஆட
உண்பவர்தின்பவர் தங்களொடு உண்டு
தெருவில்இருந்து புழுதி அளைந்து
தேடிய பாலரொடு ஓடிநடந்து

அஞ்சுவயதாகி விளையாடியே

உயர்தருஞான குருஉபதேச
முந்தமிழின்கலை யும்கரைகண்டு
வளர்பிறைஎன்று பலரும் விளம்ப
வாழ்பதினாறுபி ராயமும்வந்து
மயிர்முடிகோதி அறுபதநீல
வண்டு இமிர்தண்தொடை கொண்டை புனைந்து
மணிபொன் இலங்கு பணிகள் அணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க
மதனசொரூபன் இவன்எனமோக
மங்கையர் கண்டும ருண்டுதிரண்டு
வரிவழிகொண்டு சுழிய எறிந்து
மாமயில்போல் அவர் போவதுகண்டு
மனது பொறாமல் அவர்பிறகுஓடி
மங்கலசெங்கல சந்திகழ் கொங்கை
மருவமயங்கி இதழ்அமுதுண்டு
தேடிய மாமுதல் சேரவழங்கி
ஒருமுதல்ஆகி முதுபொருளாய்இ
ருந்தனங்களும் வம்பில்இழந்து
மதனசுகந்த விதனம் இது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபகோலமும் வேறுவிரிந்து
வளமையும்மாறி இளமையுமாறி
வன்பல்விழுந்து இருகண்கள் இருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோதகு ரோதம் அடைந்து
செங்கையினில் ஓர்த டியும் ஆகியே -

வருவது போவது ஒருமுதுகூனு
மந்திஎனும்படி குந்திநடந்து
மதியும்அழிந்து செவிதிமிர்வந்து
வாய்அறியாமல்வி டாமல் மொழிந்து
துயில்வரும்நேரம் இருமல்பொறாது
தொண்டையும்நெஞ்சும் உலர்ந்து வறண்டு
துகிலும்இழந்து சுணையும்அழிந்து
தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு
கலியுகமீதில் இவர்மரியாதை
கண்டிடும் என்பவர் சஞ்சலம் மிஞ்ச
கலகலஎன்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து
தெளிவும்இராமல் உரைதடுமாறி
சிந்தையும்நெஞ்சும்உ லைந்துமருண்டு
திடமும் அழிந்து மிகவும்அலைந்து
தேறிநல் ஆதரவு ஏதுஎனநொந்து.
மறையவன்வேதன் எழுதியவாறு
வந்துகண்டமும் என்று தெளிந்து
இனியென கண்டம் இனிஎன தொந்தம்
மேதினி வாழ்வுநி லாதினிநின்ற
கடன்முறைபேசும் என உரை நாவு
றங்கிவிழுந்துகை கொண்டுமொழிந்து
கடைவழிகஞ்சி ஒழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமும் நின்று
- நெஞ்சுதடுமாறிவரும்நேரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்பிறைபோலு எயிறும்உரோம
முச்சடையும்சிறு குஞ்சியும்விஞ்ச
மனதும்இருண்ட வடிவும்இலங்க
மாமலைபோல்யம தூதர்கள்வந்து
வலைகொடுவீசி உயிர்கொடுபோக
மைந்தரும்வந்துகு னிந்தழநொந்து
மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேஇவர் காலம்அறிந்து
பழையவர்காணும் எனும்அயலார்கள்
பஞ்சுபறந்திட நின்றவர்பந்தர்
இடும்எனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியும்என்று
பலரையும்ஏவி முதியவர்தாம்இ
ருத்தசவம்கழு வுஞ்சிலர்என்று
பணிதுகில்தொங்கல் களபம்அணிந்து
பாவகமேசெய்து நாறும் உடம்பை
வரிசைகெடாமல் எடும் எனஓடி
வந்துஇளமைந்தர்கு னிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலைஅடைந்து
மானிடவாழ்வென வாழ்வைநொந்து
விறகுஇடைமூடி அழல்கொடுபோட
வெந்துவிழுந்துமு றிந்துநிணங்கள்
உருகிஎலும்பு கருகிஅடங்கி
ஓர்பிடிநீறும்இ லாதஉடம்பை

– நம்பும் அடி யெனை இனிஆளுமே.

## தாயாருக்குத் தகனக்கிரியை செய்கையிற் பாடியது

### நேரிசை வெண்பா

ஐயிரண்டு திங்களாய் அங்கம் எலாம் நொந்து பெற்றுப்
பையல்என்ற போதே பரிந்து எடுத்துச் – செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள்சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் – தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்?
வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்துஎன்னைக் காதலித்து – முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்?

நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்ந்தெடுத்துத் தாழாமே – அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமுட்டு வேன்?

அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசை இட்டுப் பார்த்து மகிழாமல் – "உருசி உள்ள
தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப்பூ
மானே!" என அழைத்த வாய்க்கு?

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் – மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி "என்றன்
மகனே!" என அழைத்த வாய்க்கு

## கலி விருத்தம்

முன்னை இட்டதீ முப்பு ரத்திலே
பின்னை இட்டதீ தென்இ லங்கையில்
அன்னை இட்டதீ அடிவ யிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பிரதான வீதிகளின் பெயர்கள்

- A1 - கொழும்பு – கண்டி
- A2 - கொழும்பு – வெள்ளவாய
- A3 - பேலியகொட – புத்தளம்
- A4 - கொழும்பு – மட்டக்களப்பு
- A5 - பேராதனை – செங்கலடி
- A6 - அம்பேபுஸ்ஸ – திருகோணமலை
- A7 - அவிஸாவெல - இரத்தினபுரி
- A8 - பாணந்துறை - இரத்தினபுரி
- A9 - கண்டி – யாழ்ப்பாணம்
- A10 - கண்டி – புத்தளம்.
- A11 - மரதன்கடவெல – திருக்கண்டிமடு
- A12 - புத்தளம் - திருகோணமலை
- A13 - அனுராதபுரம் - கல்கமுவ
- A14 - மதவாச்சி – தலைமன்னார்
- A15 - மட்டக்களப்பு – திருகோணமலை
- A16 - பேரகல - ஹாலிஎல
- A17 - காலி - மாதம்பே
- A18 - பெல்மதுளை – நோனாகம
- A19 - பொல்காவெல – கேகாலை
- A20 - அனுராதபுரம் - ரம்பேவ
- A21 - கேகாலை – கரவனல்ல
- A22 - பசறை – மொனராகலை
- A23 - வெள்ளவாய – எல்ல
- A24 - மாத்தறை – அக்குரஸ்ஸ
- A25 - சியன்பலன்துவ – அம்பாறை
- A26 - கண்டி – படியத்தலாவ
- A27 - அம்பாறை – மகா ஓயா
- A28 - அனுராதபுரம் - படேனியா
- A29 - வவுனியா – ஹொரவப்பொத்தான
- A30 - வவுனியா – பறையனான்குளம்
- A31 - காரைதீவு – அம்பாறை
- A32 - நாவற்குழி – மன்னார்
- A33 - ஜாஎல - யக்கல
- A34 - மாங்குளம் - முல்லைத்தீவு
- A35 - பரந்தன் - முல்லைத்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதிச் சைகைகள்

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் பாதையை பாவிப்பது எப்படி என்று சாரதிகளுக்கும் பாதையை பாவிப்போருக்கும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இச்சைகைகள் அபாய எச்சரிக்கை சைகைகள், ஒழுங்குபடுத்தும் சைகைகள் (தடை செய்யும் சைகைகள்), மேலதிக சட்டங்கள், மட்டுப்படுத்தும் சைகைகள், கட்டாய சைகைகள், முந்தும் உரிமை சைகைகள், சாரதிக்கு பயனுள்ள வேறு சைகைகள், வீதிக் குறியீடுகள், ஆபத்து பகுதிகள், தகவல் தரும் சைகைகள், திசை காட்டும் சைகைகள் என பிரிக்கப்பட்டுள்ளன. இந்த சைகைகள் அடங்கிய கைநூல் கட்டாயமாக சாரதி ஒருவர் தன்வசம் வைத்திருக்க வேண்டும். மற்றும் பாதையை பாவிக்கும் சிறுவர், பாடசாலை மாணவர்கள், பெரியவர்கள், சைக்கிள் ஓட்டிகள் பாதையை இவ் வீதிச்சட்டத்தை கடைப்பிடித்து நடப்பார்களேயானால் விபத்தைச் சந்திக்க மாட்டார்கள். தாங்களும் விபத்தை சந்திக்காமல் மற்றவர்களுக்கும் விபத்தை ஏற்படுத்தாமல் இருப்பதற்கு வழிவகுக்கும் என்று கூறிக்கொள்வதுடன் இறந்த எனது தாயாரின் நினைவாக இதைச் சமர்ப்பிக்கின்றேன். சகல தரப்பினரும் வாசித்து அதன்படி நடந்து உயிரிழப்பும் அங்கவீனமும் இல்லாது வாழ வேண்டுமென்று வேண்டி நிற்கின்றேன்.

நன்றி!

**சி.பொ. வரதராஜன்**
அதிபர்,
சாரதி பயிற்சிப் பாடசாலை.

இ.போ.ச(வட),
கோண்டாவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிச் சைகைகளும் வீதிக் குறியீடுகளும்
# ROAD SIGNS AND MARKINGS

## அபாய எச்சரிக்கைச் சைகைகள்
## DANGER WARNING SIGNS



முன்னால் இடதுபக்க வளைவு
Left Bend Ahead



முன்னால் வலதுபக்க வளைவு
Right Bend Ahead



முன்னால் இடது பக்கத்தில் இரட்டை வளைவு
Double Bend Left Ahead



முன்னால் வலதுபக்கத்தில் இரட்டை வளைவு
Double Bend Right Ahead



முன்னால் இடதுபக்க கொண்டை ஊசி வளைவு
Hair Pin Bend Left Ahead



முன்னால் வலதுபக்க கொண்டை ஊசி வளைவு
Hair Pin Bend Right Ahead



முன்னால் இரட்டை வண்டிப்பாதை ஆரம்பிக்கின்றது
Dual Carriage-way Starts Ahead



முன்னால் இரட்டை வண்டிப்பாதை முடிகின்றது
Dual Carriage-way Ends Ahead



முன்னால் வீதி இரு பக்கத்தாலும் ஒடுங்குகின்றது
Road Narrows on Both Sides Ahead



முன்னால் வீதி இடது பக்கத்தால் ஒடுங்குகின்றது
Road Narrows on the Left Side Ahead



முன்னால் வீதி வலது பக்கத்தால் ஒடுங்குகின்றது
Road Narrows on the Right Side Ahead



முன்னால் குறுக்கு வீதிகள்
Cross Roads Ahead



முன்னால் முதலாவது பக்க வீதியை இடது பக்கமாகக் கொண்டு அடுத்து வரும் சந்தி
Staggered Junction with the First Side Road to the Left Ahead



முன்னால் முதலாவது பக்க வீதி[illegible] பக்கமா[illegible] அடுத்து வரும் சந்தி
Staggered Junction with the First Side Road to the Right Ahead



முன்னால் "T" சந்தி
T-Junction Ahead



முன்னால் "Y" சந்தி
Y-Junction Ahead

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னால் இடமிருந்து வரும் வாகனம் பிரதான வீதியுடன் இணையுமிடம்
Traffic From Left Merges Ahead



முன்னால் வலமிருந்து வரும் வாகனம் பிரதான வீதியுடன் இணையுமிடம்
Traffic From Right Merges Ahead



முன்னால் ஒடுங்கிய பாலம்
Narrow Bridge Ahead



முன்னால் இருபக்கத்தினால் செல்லக்கூடிய பாதை
Two-way Traffic Ahead



முன்னால் நிறுத்தி வழிவிடவும்
Stop and give way Ahead



முன்னால் வழிவிடவும்
Give Way Ahead



முன்னால் சுற்று வளைவு
Roundabout Ahead



முன்னால் ஒளிச் சமிக்ஞைகள்
Light Signals Ahead



முன்னால் அபாயகரமான சரிவு
Dangerous Descent Ahead



முன்னால் அபாயகரமான ஏற்றம்
Dangerous Ascent Ahead



முன்னால் வழுக்கும் வீதி
Slippery Road Ahead



முன்னால் ஐதாக்கப்பட்ட கிரவல் தரை
Loose Gravel Ahead



முன்னால் கற்பாறைகள் விழும் இடம்
Falling Rocks Ahead



முன்னால் பாதசாரிகள் கடவை
Pedestrian Crossing Ahead



முன்னால் சிறுவர் கடவை
Children Crossing Ahead



முன்னால் பாதை வேலை
Road Works Ahead



முன்னால் பாதுகாப்புடைய புகையிரதக் கடவை
Level Crossing with Gates Ahead



முன்னால் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை
Unprotected Level Crossing Ahead



முன்னால் பஸ் வண்டிப் பாதை
Bus Lane Ahead



முன்னால் துவிச்சக்கரவண்டி ஒழுங்கை
Cycle Lane Ahead

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னால்
துவிச்சக்கரவண்டி
கடவை
Cycle Crossing
Ahead



முன்னால் மந்தை
அல்லது வேறு
விலங்குகள் பாதையைக்
கடக்கக்கூடும்
Cattle or Other
Animals Crossing the
Road Ahead



முன்னால்
துறைமேடைக்கு
அல்லது
ஆற்றங்கரைக்குச்
செல்லும் வீதி
Road leading to
Quay or River
Bank Ahead



முன்னால்
கட்புலனற்றோர்
கடக்கும் கடவை
Blind People
Crossing Ahead



முன்னால் கரடு
முரடான வீதி
Road Humps Ahead



முன்னால்
கரடுமுரடான
சமமற்ற வீதி
Uneven Road Ahead



முன்னால்
ஆபத்தான பக்கப்
பிட்டிகள்
Dangerous Side
Slopes Ahead



முன்னால் பாதுகாப்பற்ற
புகையிரதக் கடவை
Level Crossing
without barriers Ahead

## ஒழுங்குபடுத்தும் சைகைகள்
## REGULATORY SIGNS

### தடை செய்யும் சைகைகள் - PROHIBITORY SIGNS



வாகனம் செல்லத்
தடை
No Entry



இடப்பக்கம் திரும்பத்
தடை
No Left Turn



வலப்பக்கம்
திரும்பத் தடை
No Right Turn



"U" முடக்குத்
திரும்பத் தடை
No U-turn



முந்திச் செல்லத்
தடை
No Overtaking



முந்திச்
செல்லக்கூடும்
End of No
Overtaking



பொருட்களை
கொண்டு செல்லும்
வாகனங்கள் முந்திச்
செல்லத் தடை
No Overtaking by
Goods Vehicles



பொருட்களை
கொண்டு செல்லும்
வாகனங்கள் முந்திச்
செல்லக்கூடும்
End of No
Overtaking by Goods
Vehicles



ஒலி எழுப்பத் தடை
No Horning



சகல வாகனங்களுக்கும்
வீதி மூடப்பட்டுள்ளது
Road Closed for all Vehicles



பஸ்வண்டி
செல்லத் தடை
Road Closed for Buses



லொறிகள் செல்லத்
தடை
Road Closed for Lorries

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இழுவை வண்டியொன்றை சக்தியால் இழுத்துச் செல்லும் வாகனத்திற்கு வீதி தடை செய்யப்பட்டுள்ளது
Road Closed for Any Power- driven Vehicle Drawing a Trailer



மோட்டார் துவிச்சக்கர வண்டியும் மோட்டார் வாகனங்களும் தடை செய்யப்பட்டுள்ளது
Road Closed for Motor cars and motor cycles



சக்தியால் செலுத்தப்படும் விவசாய வாகனங்களுக்கு வீதி மூடப்பட்டுள்ளது
Road Closed for Power Driven Agricultural Vehicles



பாதசாரிகளுக்கு வீதி தடை செய்யப்பட்டுள்ளது
Road Closed for Pedestrians



துவிச்சக்கர வண்டி செல்லத் தடை செய்யப்பட்டுள்ளது
Road Closed for Cyclists



மோட்டார் சைக்கிள்களுக்கு வீதி மூடப்பட்டுள்ளது
Road Closed for Motor Cyclists



முச்சக்கர வண்டிகளுக்கு வீதி மூடப்பட்டுள்ளது
Road Closed for Three-wheelers



மிருகங்களால் இழுத்துச் செல்லப்படும் வாகனங்களுக்கு வீதி மூடப்பட்டுள்ளது
Road Closed for Vehicles drawn by Animals



கை வண்டிகள் செல்ல வீதி தடை செய்யப்பட்டுள்ளது
Road Closed for Handcarts



வாகனங்கள் நிறுத்தல் கூடாது
No Parking



வாகனங்கள் நிறுத்தவும் தரிக்கவும் கூடாது
No Parking and Standing



ஒற்றை நாட்களில் வாகனங்கள் நிறுத்தக் கூடாது
No Parking on Odd Days



இரட்டை நாட்களில் வாகனங்கள் நிறுத்தக் கூடாது
No Parking on Even Days




வேகத்தின் வரையறை
Speed Limit




வேகத்தின் வரையறை முடிவு
End of Speed Limit

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டுப்படுத்தும் சைகைகள் - RESTRICTIVE SIGNS




அகலத்தின்
வரையறை
Width Limit




உயரத்தின்
வரையறை
Height Limit




எடையின்
வரையறை
Weight Limit




ஓர் அச்சாணி மீது
எடையின் வரையறை
Weight Limit on
One Axle

## கட்டாயச் சைகைகள் - MANDATORY SIGNS



இடப்பக்கம்
திரும்பவும்
Left Turn



வலப்பக்கம்
திரும்பவும்
Right Turn



நேரே செல்லவும்
Straight



முன்னால் இடப்பக்கம்
திரும்பவும்
Left Turn Ahead



முன்னால்
வலப்பக்கம்
திரும்பவும்
Right Turn Ahead



இடதுபக்கமாக
இப்பக்கத்தை
கடக்கவும்
Pass This Side, Left
Side



வலதுபக்கமாக
இப்பக்கத்தைக்
கடக்கவும்
Pass This Side, Right
Side



சுற்றுவட்டம்
Roundabout

## முந்துரிமைச் சைகைகள் - PRIORITY SIGNS



வழிவிடவும்
Give Way




நிறுத்தி வழிவிடவும்
Stop and give way



முந்துரிமை வீதி
Priority Road



முந்துரிமை வீதியின்
முடிவு
End of Priority Road



முன்னால் வரும்
வாகனத்துக்கு முந்துரிமை
Priority for Oncoming
Traffic



முன்னால் வரும்
வாகனத்தை விட தமது
வாகனத்திற்கு முந்துரிமை
Priority Over
Oncoming Traffic

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் கொடுக்கும் சைகைகள்
# INFORMATIVE SIGNS

## விசேட ஒழுங்குபடுத்தும் சைகைகள்
## SPECIAL REGULATORY SIGNS



பாதசாரிக் கடவை
Pedestrian Crossing



ஒருவழிப் பாதை
One Way



வைத்தியசாலை
Hospital




வாகனம்
நிறுத்துமிடம்
Parking



அங்கவீனர்களுக்காக
ஒதுக்கப்பட்ட
வாகனம்
நிறுத்துமிடம்
Parking for
Handicapped Persons



பஸ்வண்டி தரிப்பிடம்
Bus Stop



பஸ்வண்டி மட்டும்
செல்லும் ஒழுங்கை
Bus Only Lane Begins
or Continues



பஸ்வண்டி மட்டும்
செல்லும் ஒழுங்கை
முடிவு
Bus Only Lane Ends



துவிச்சக்கர வண்டி
மட்டும் செல்லும்
ஒழுங்கை
Cycle Lane Begins or
Continues



துவிச்சக்கர வண்டி
மட்டும் செல்லும்
ஒழுங்கை முடிவு
Cycle Lane Ends



துவிச்சக்கர
வண்டிகளுக்கும்
பாதசாரிகளுக்கும்
ஆன பாதை ஆரம்பம்
Cycle and Pedestrian
Lane Begins or
Continues



துவிச்சக்கர
வண்டிகளுக்கு
பாதசாரிகளுக்குடம்
ஒதுக்கப்பட்ட
ஒழுங்கை
முடிவடைகிறது
Cycle and Pedestrian
Lane Ends



பாதசாரி கடக்கும்
நிலக்கீழ் பாதை
Pedestrian Underpass



பாதசாரி கடக்கும்
மேல்பாதை
Pedestrian Overpass



கடுகதிப் பாதை
Expressway




கடுகதிப்பாதை
முடிவு
End of Expressway

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாதசாரிகளுக்கு மட்டுமான வீதி
Street for Pedestrians Only



மெதுவாகச் செல்லும் வீதிப் பாவனையாளர்களின் திசையைக்காண் சைகை
Direction Sign for Slow Moving Road Users



வாகனங்களுக்கான வீதி
Road for Motor Vehicles




வாகனங்களுக்கான வீதி முடிவு
End of Road for Motor Vehicles

## பாதைகளுக்கான (மார்க்க) வழி இலக்கச் சைகைகள்
## ROUTE NUMBER SIGNS




கடுகதி பாதைகளுக்கான வழி இலக்க சைகை
Route Number Signs for Expressways




"A" வகுப்பு நெடுஞ்சாலைகளுக்கான வழி
Route Number Sign for A" Class Highways




"B" வகுப்பு நெடுஞ்சாலைகளுக்கான வழி
Route Number Sign for B" Class Highways

## சேவை வசதிகளுக்குரிய சைகைகள்
## SERVICE FACILITIES SIGNS



பொதுத் தொலைபேசி
Public Telephone



தகவல்
Information



கைத்தொழில் இடம்
Industrial Area



உணவு விடுதி
Restaurant



சிற்றுண்டிச் சாலை
Refreshments or Cafeteria



ஹோட்டல்
Hotel



பெற்றோல் நிலையம்
Filling Station



பழுதுபார்ப்புச் சேவை
Breakdown Service



பகிரங்க கடற்கரை
Public Beach



சுற்றுலா இடம்
Picnic Site

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலதிகமாகப் பயன்படுத்தும் பலகைகள்
## ADDITIONAL PANELS





இடர் உள்ள தூரம்
Distance to a Hazard




ஒழுங்குக்குரிய தூரம்
Distance to a Regulation




இடர் உள்ள நீளம்
Length of a Hazard




ஒழுங்குள்ள நீளம்
Length of a Regulation




ஒழுங்கின் திசை ஆரம்பிக்கின்றது
Start of Direction of Regulation



ஒழுங்கின் திசை
Direction of Regulation




ஒழுங்கின் முடிவு
End of Regulation




வைத்தியசாலைக்கு மட்டும் போக்குவரத்து விதிவிலக்கு
Exception from Regulation



குறுக்கு வீதியில் இடர் உள்ள திசை
Direction to a Hazard on an Intersecting Road




வாகனம் நிறுத்துமிட தடை அல்லது நிற்குமிடமும் நிறுத்துமிடமும் தடையின் எல்லை
Limitation of Parking Prohibition or Parking and Standing Prohibition





பாடசாலை (மேலான) எச்சரிக்கை சைகை
School (supplementing) a Warning Sign





பாடசாலை (மேலான) ஒரு ஒழுங்குபடுத்தும் சைகை
School (supplementing) a Regulatory Sign

## வீதி குறியீடுகள்
## ROAD MARKINGS


### குறுக்குக் குறியீடுகள் - TRANSVERSE MARKINGS




நிறுத்தற் கோடு
Stop Line



இடம் அல்லது சுற்றுவட்டத்தில் இடம் கொடு குறியீடு
Give Way Marking at a place or Roundabout



பாதசாரிகள் கடக்கும் இடத்தில் இடம்கொடு
Give Way Marking at Pedestrian Crossings



துவிச்சக்கர வண்டிக் கடவை
Cyclists Crossing

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுங்கோட்டுக் குறியீடுகள்
# LONGITUDINAL MARKINGS



நடுக் கோடு
Centre Line



ஒளித் தெறிப்புச் செய்யும் குமிழ்களுடன் நடுக் கோடு
Centre Line with Reflective Studs



உடைந்த ஒழுங்கை கோடு
Broken Lane Line



தொடர்ச்சியான ஒழுங்கைக் கோடு
Continuous Lane Line



எச்சரிக்கை குறியீடு
Warning Marking



உடைந்த மத்திய கோடும், தொடர்ச்சியான கோடும் கொண்ட கோடு
Combination of a Broken Centre Line and a Continuous Line



தொடர்ச்சியான மத்திய கோடும் உடைந்த கோடும் கொண்ட கோடு
Combination of continuous Centre Line and a Broken Line



இரண்டு தொடர்ச்சியான மத்திய கோடு
Combination of Two Continuous Centre Lines



ஓரக் கோடு
Edge Line



நிறுத்தலை தடைசெய்யும் குறியீடு
No Parking Marking



நிற்கவோ நிறுத்தவோ அனுமதியற்ற குறியீடு
No Standing and Parking Marking

## ஏனைய குறியீடுகள் - OTHER MARKINGS




இடதுபக்கம் திரும்பும் குறியீடு
Turn Left" Marking




வலதுபக்கம் திரும்பும் குறியீடு
Turn Right" Marking




முன்னால் மட்டும் செல்லும் குறியீடு
Ahead Only" Marking


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிறுத்துக குறியீடு
Stop" Marking




மெதுவாக குறியீடு
Slow" Marking



போக்குவரத்து ஒழுங்கைகளைக் குறிக்கும் குறியீடு
Indicating Traffic Lanes



பெட்டிச் சந்திகள் குறியீடு
Box Junction Marking




பஸ்வண்டி ஒழுங்கை குறியீடு
Bus Lane Marking




துவிச்சக்கர வண்டி ஒழுங்கை குறியீடு
Cycle Lane Marking




சமாந்தரமாக நிறுத்தற் குறியீடு
Parallel Parking Marking




கோணலாக நிறுத்தற் குறியீடு
Angled Parking Marking



முன்னால் பாதசாரிகள் கடவை மெதுவாக அணுகவும் குறியீடு
Pedestrian Crossing Ahead Marking Approach Slowly



எதிர்த் திசையில் வாகனப் போக்குவரத்துக் குறியீடு
Traffic in opposite direction



அதே திசையில் வாகனப் போக்குவரத்துக் குறியீடு
Traffic in same direction

# போக்குவரத்துக்கான ஒளிச் சமிக்ஞைகள்
# TRAFFIC LIGHT SIGNALS

## வாகனப் போக்குவரத்துக்கான ஒளிச் சமிக்ஞைகள்
## SIGNALS FOR VEHICULAR TRAFFIC



சிவப்பு
Red



சிவப்பும் செம்மஞ்சளும்
Red and Amber



பச்சை
Green



செம்மஞ்சள்
Amber

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விட்டு விட்டு ஒளிரும் செம்மஞ்சள்
Flashing Amber



மேலதிகமான பச்சை அம்புக்குறி
Additional Green Arrow



சிவப்பு அம்புக்குறி
Red Arrow



பச்சை அம்புக்குறி
Green Arrow



ஒழுங்கை சமிக்ஞைகள், சிவப்பு
Lane Signal, Red



ஒழுங்கை சமிக்ஞைகள், பச்சை
Lane Signal, Green


## பாதசாரிகளுக்கான ஒளிச் சமிக்ஞைகள்
## SIGNALS FOR PEDESTRIANS



சிவப்பு
Red



பச்சை
Green



விட்டொளிரும் பச்சை
Flashing Green

## நிரந்தர உபயோகத்திற்கான பிற போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சின்னங்கள்
## OTHER TRAFFIC CONTROL DEVICES FOR PERMANENT USE



திசை காட்டும் பலகை
Direction Boards



செவ்றோன் கோடு
Chevron Marker

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பக்கத்தடைக் குறியீடு
Side Obstacle Marker



பாதை ஓர வடைடங்கள்
Roadside Delineators




நிறுத்துக – செல்க
Stop sign Go Sign



காவலாளர் நிலையம் நிறுத்தல் கூடாது
No Parking Guard Post

## வீதி வேலைப் பிரதேசங்களுக்கான பிற போக்குவரத்து கட்டுப்பாட்டுச் சாதனங்கள்
## OTHER TRAFFIC CONTROL DEVICES FOR ROAD WORK AREAS



வீதி வேலைகளுக்கான தடைப்பலகை
Barricade Board for Road Works



வீதி வேலைகளுக்கான திசையைக் காட்டும் பலகை
Direction Board for Road Works



பக்கத் தடைக் குறியீடுகள்
Side Obstacle Markers



தடை நாடா
Barricade Tape



ஒளிக்கூண்டு
Lantern



வெளிச்சம்
Flasher

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போக்குவரத்துக் கூம்பு
Traffic Cone



போக்குவரத்துக் கூம்பு
(நிறுத்தக் கூடாது)
Traffic Cone
(No Parking)




வாகனம் பழுதடைதல் ∴ மோதலுக்கான எச்சரிக்கைக் குறி
Danger warning signs at accident scenes or a disabled vehicle




பாதசாரிக் கடவை
Pedestrian Crossing




வாகன அடையாளக் குறிகள்
Vehicle Markings



மின்சாரக் குமிழ்கள்
Barricade board with electric lamps

# திசை காட்டும் சைகைகள்
# DIRECTION INDICATOR SIGNS

பிறேக் வெளிச்சச் சைகைகள்
**BRAKE LIGHT SIGNALS**



நான் வலது பக்கமாகச் செல்வதற்கு அல்லது வலது பக்கம் திரும்ப உத்தேசிக்கிறேன்
I intend to move to the right or turn right



நான் இடது பக்கமாக செல்வதற்கு அல்லது இடது பக்கம் திரும்புவதற்கு உத்தேசிக்கிறேன்
I intend to move in to the left or turn left or stop on the left



நான் வேகத்தைக் குறைப்பதற்கு அல்லது நிறுத்துவதற்கு உத்தேசிக்கிறேன்
I am slowing down or stopping

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைச் சைகைகள்
# ARM SIGNALS



நான் வலதுபக்கமாகச் செல்வதற்கு அல்லது வலது பக்கம் திரும்ப உத்தேசிக்கிறேன்
I intend to move to the right or turn right



நான் வேகத்தைக் குறைப்ஹபதற்கு அல்லது நிறுத்துவதற்கு உத்தேசிக்கிறேன்
I intend to slow down or stop
(The signal is particularly important at Zebra crossing to let other road users, including pedestrians, know that you are slowing down or stopping)



நான் இடது பக்கம் செல்வதற்கு அல்லது இடது பக்கமாகத் திரும்ப உத்தேசிக்கிறேன்
I intend to move in to the left or turn left

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சைகைகள்
## TRAFFIC CONTROL SIGNALS

நிறுத்துக - **STOP**



முன்னால் இருந்து
வருகின்ற போக்குவரவு
Traffic approaching
from the front

நிறுத்துக - **STOP**



போக்குவரத்தை மூடும்
எச்சரிக்கை
Warning Signal
closing the traffic

நிறுத்துக - **STOP**



முன்னால் இருந்தும்
பின்னால் இருந்தும்
வருகின்ற போக்குவரவு
Traffic approaching both
from front and behind

## போக்குவரவு மீது சைகை - BECKONING TRAFFIC ON



வலது பக்கத்தில் இருந்து
வாகனங்களை அழைத்தல்
To bring on vehicles
from the right



முன்னால் இருந்து
வாகனங்களை
அழைத்தல்
To bring on vehicles
from the front



இடது பக்கத்தில் இருந்து
வாகனங்களை அழைத்தல்
To bring on vehicles
from the left

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரம் கூப்பி தலை வணங்கி
## எமது இதய பூர்வமான நன்றிகள்




எமது குடும்பத்தின் குலவிளக்கு அணைந்து விண்ணுலகம் சென்ற செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசியிலும் எமது துயரத்தை பகிர்ந்துகொண்ட அன்பு உள்ளங்களுக்கும் எமது தோளோடு தோள் சேர்ந்து உதவி புரிந்த உற்றார் உறவினர், நண்பர்கள் அயலவர்கள் ஆகியோருக்கும் நெடுந்தூரம் பயணம் செய்து வந்து எமது துக்கத்தை பகிர்ந்து கொண்டவர்களுக்கும், இறுதிக் கிரிகைகள் யாத்திரைகள் மற்றும் அந்தியேட்டிக் கிரிகைகளிலும் ஆத்மசாந்தி பிரார்த்தனைகளிலும் மதியபோசனத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், முக்கியமாக இறப்பு செய்தி கேட்ட நேரம் முதல் இறுதி யாத்திரை வரை சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி மலர் வளையம், கண்ணீர் அஞ்சலிகள் வழங்கிய இ.போ.ச வடக்கு உத்தியோகத்தர், ஊழியர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இம்மலரை அழகுற அச்சிட்டுத் தந்த பிறிண்ட் மாஸ்டர் நிறுவனத்தினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




* – அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



Print Master. T.P. 021-205 3322

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org